ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1701/4 - 2011 අප්‍රේල් 11 වැනි සඳුදා - 2011.04.11
*1701/4ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாணத்தின் மாகாண சபை

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் 2011 ஆண்டின் 2 ஆம் இலக்க ஊவா மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை மீளாய்வதற்கான நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி சம்மதிக்கப்பட்டு 2011, மாச்சு 01 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டி. சிறிசேன,*
*மாகாண சபைச் செயலாளர்,*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*ஊவா மாகாண மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,*
*ராஜவீதி,*
*பதுளை,*
*2011, ஏப்பிறல் 01.*

**2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண உள்ளூராட்சிமன்ற நிர்வாக மீளாய்வு அதிகாரம் பற்றிய நியதிச் சட்டம்**

*ஊவா மாகாணத்திற்குள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள மாகாண உள்ளூராட்சிமன்றங்களின் மீளாய்வு செய்வதற்கான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், அதற்கு இடைநேர் விளையக்கூடிய விடங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டம்.*

*இந்நியதிச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் 277 (1), 277 (1 அ), 277 (1ஆ), 277 (2 ஆ), 277 (3) 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவிற்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 185 ஆம் பிரிவிற்கும் ஒத்திசைவானது.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

*1. இந்நியதிச் சட்டத்தினை "ஊவா மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்ற நிர்வாகத்தின் மீளாய்வு அதிகாரம் பற்றிய நியதிச் சட்டம்" என அறிமுகப்படுத்தப்படுவதோடு, ஊவா மாகாண ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.*

திறமையற்ற தன்மை காரணமாக மாகாண உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து விடுவது தொடர்பில் அமைச்சர் அவர்களுக்குக் குரிய அதிகாரங்கள்.

2. (1) மாகாண உள்ளூராட்சி நிறுவனமொன்று அல்லது ஏதேனும் மாகாண உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கத்தவர் ஒருவர் அல்லது உள்ளூராட்சிமன்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட அல்லது அவரால், முக்கியஸ்தர் ஒருவர்

(அ) முறைசாரா வகையில் அல்லது ஊழல்களோடு நிர்வகிக்கப்பட்டுள்ளதாக, அல்லது ;

(ஆ) சம்பந்தப்பட்ட சட்டம், கட்டளை, பிரமாணங்கள், நியதிச் சட்டங்கள் அல்லது ஏதேனும் எழுத்துமூலமான சட்டமொன்றின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் நிறைவேற்றுவதை கைவிடப்பட்டுள்ளதாக, அல்லது ;

(இ) சட்டத்தில் அல்லது நியதிச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுவதை தவிர்த்து அல்லது அவை மீது கவனம் செலுத்தப்படாத பட்சத்தில் அல்லது ;

(ஈ) சம்பந்தப்பட்ட சட்டத்தை, கட்டளைகளை, பிரமானங்களை, நியதிச் சட்டங்களை அல்லது வேறு ஏதேனும் எழுத்துமூல சட்டமொன்றின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையற்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக அல்லது

(உ) கூட்டங்களை நடாத்துதல், கூட்டங்களுக்கு வருகை தரல், அக்கூட்டங்களில் வாக்கெடுப்பு அல்லது அக்கூட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து கைவிடப்பட்டுள்ளதாக ;

(ஊ) நடைமுறையில் உள்ள நிலையியல் கமிட்டிகள்/குழுக்கள் என்பவற்றை அங்கத்துவப்படுத்தி தொடர்ந்தும் அவற்றில் கலந்து கொள்ளாதிருக்கும் தருணத்தில்.

ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் அமைச்சரவையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்கள் திருப்தியடையும் ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஒத்திசைவாக தேவைப்படும் வகையில் அமைச்சர் அவர்களால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைகள் மூலம்,

(i) சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்றத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதானியை பதவி நீக்கம் செய்யலாம், அல்லது ;

(ii) சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்றத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் பதவி நீக்கம் செய்யலாம் அல்லது ;

(iii) சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்றங்களை கலைத்து விடலாம்.

அத்தகைய கட்டளைகளை துரிய கதியில் மாகாண சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அமைச்சர் அவர்களால் (1) (I) அல்லது II அல்லது III ஆவது உபபிரிவின் கீழ் கட்டளையிட முன்பு, குறித்த (1) ஆவது உப பந்தியில் (அ) முதல் (ஊ) வரையிலான உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் திருப்தியடைவதற்காக அவ்விடயங்கள் பற்றி ஆராய்ந்து, பரிசோதித்து மூன்று மாதங்களுக்கிடையில் அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஓய்வுபெற்ற நீதிவான் ஒருவரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமனம்பெற்ற நபருக்கு சம்பந்தப்பட்ட விசாரணை, தொடர்பாக விசாரணை ஆணைக்குழு சட்டமூலத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

(3) (அ) ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் (2) ஆம் உப பிரிவின் கீழ் ஆராய்வதற்கென ஓய்வுபெற்ற நீதிவானொருவரை தெரிவு செய்ய முன்பு அல்லது (2) ஆவது உபபிரிவின் கீழ் ஆராயும் போது அந்நடவடிக்கைகளை நிறுத்தும்முகமாக ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தரினால் நடாத்தப்படும் ஆராய்வுகளுக்கு அல்லது அறிவிப்பிற்கிணங்க அமைச்சர் அவர்களால் -

(i) சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட முக்கியஸ்தர்களுடைய சேவையை இடைநிறுத்துவதற்கு வாய்ப்பு உள்ளதோடு, அவருடைய பதவியில் கடமையாற்றுவதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அம் மாகாண உள்ளூராட்சிமன்றத்தை, பிரதி நகர பிதா அல்லது உப நகர பிதாவின் கட்டளைகளுக்கிணங்க சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்றத்தின் பிரதி மேயர் அல்லது உப தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ள அல்லது, பிரதி மேயர் அல்லது உப தலைவர் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதொரு சந்தர்ப்பத்தில். கீழ் குறிப்பிடப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முக்கியஸ்தரின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் நகர ஆணையாளரிடம் அல்லது சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் உதவி மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் கட்டளையிட வேண்டும், அல்லது ;

(ii) சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்றத்தில் எவரேனும் குழு அங்கத்தவர் ஒருவர் பதவி நீக்கம் செய்யலாம், அல்லது ;

(iii) சம்பந்தப்பட்ட மாகாண உள்ளூராட்சிமன்ற கடமைகளை இடைநிறுத்துவதற்கு வாய்ப்பு உள்ளதோடு, மாகாண உள்ளூராட்சிமன்றத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் உதவி மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அல்லது அமைச்சர் அவர்கள் தீர்மானிக்கின்ற மாகாண அரச சேவைக்கு சொந்தமான வேறொரு உயரதிகாரி, பிரதேச உள்ளூராட்சி துறையில் சேவையாற்றும் வேறொரு அரச உத்தியோகத்தரிடம் ஆணையிடலாம்.

(3) (ஆ) இப்பிரிவின் (2) ஆவது உபபிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நபருடைய அறிக்கை தனக்கு கிடைத்த பின் அமைச்சர் அவர்களால், இப்பிரிவின் கீழ் (1) ஆவது உபபிரிவின் மூலம் விதித்தல், அல்லது உபபிரிவின் (அ) பந்தியின் கீழ் விதிகளை இரத்து செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

(4) கலைக்கப்பட்ட மாநகரசபைக்கு பதிலாக, மாநகர சபைகள் கட்டளை சட்ட ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக புதிய மாநகர சபையொன்றை பிரஸ்தாபிக்குமாறும், கலைக்கப்பட்ட நகர சபைக்கு பதிலாக நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக புதிய நகர சபை ஒன்றை பிரஸ்தாபிக்குமாறும், கலைக்கப்பட்ட பிரதேச சபையொன்றுக்கு பதிலாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக புதிய பிரதேச சபையொன்றை பிரஸ்தாபிக்குமாறு மேல்குறிப்பிடப்பட்டுள்ள வகையில், வெளியிடப்படும் கட்டளைகள் மூலமாக அமைச்சர் அவர்களினால் அறிவிக்க வேண்டும்.

(5) அமைச்சர் அவர்களால் 3 (1) உப பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் மூலம் பிரதேச சபையொன்று அல்லது நகர சபையொன்று கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரால் அவ்விதிகளில்-

பிரதேச சபையின் அல்லது நகர சபையின் கடமைகளை நிர்வகிப்பதற்காகவும், அக்கடமைகளுக்காக விதிகளின் கீழ் உறுதியாக குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு இணங்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிரதேச சபையொன்றின் அல்லது நகர சபை கட்டளை சட்டத்தின் கீழ் நகர சபைகளின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக உரிய கால எல்லைக்குள் அல்லது காலத்திற்கு காலம் அல்லது விசேட ஆணையாளர் ஒருவரை, ஆணையாளர்களை தெரிவு செய்தல் வேண்டும். அதே போன்று.

(6) 5 ஆவது உபபிரிவின் கீழ், அமைச்சர் அவர்களால் எவரேனும் விசேட ஆணையாளர் ஒருவர் அல்லது ஆணையாளர்கள் நியமிக்கப்படும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபைக்கு அல்லது நகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அனைத்து சொத்துக்கள் ஒப்பந்தங்களின் கீழ் உள்ள உரிமைகள் மற்றும் அனைத்து அதிகாரங்களையும் விசேட ஆணையாளரிடம், ஆணையாளர்களிடம் பொறுப்பளிக்கப்பட்டதாக கருத வேண்டும். அதேபோன்று, விதிகளின் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையின் இறுதி வரை அல்லது வேறொரு வகையில் அமைச்சர் அவர்களால் கட்டளையிடும் வரை பிரதேச சபையின் அல்லது நகர சபையில் அனைத்து பொறுப்புகளையும் கடமைகளையும் விசேட ஆணையாளரிடம் அல்லது ஆணையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டியதோடு, அவர் அல்லது அவர்களால் அவற்றை நிறைவேற்றல் வேண்டும்.

(7) பிரதேச சபையொன்றில் அல்லது நகர சபையொன்றின் கடமைகள் பற்றிய நிர்வாகத்தை விசேட ஆணையாளர் ஒருவரால் அல்லது ஆணையாளர்களால் நிறைவு செய்த பின்பு அப்பிரதேச சபை அல்லது நகர சபை எல்லைக்காக புதிய பிரதேச சபையொன்று அல்லது நகர சபையொன்று பிரஸ்தாபிக்கப்பட்டதொரு சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட புதிய பிரதேச சபையை அல்லது நகர சபையை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அவ் விசேட ஆணையாளர் அவர்களுடைய அல்லது ஆணையாளர்களுடைய பதில் கடமையாற்றுபவராக வேண்டும்.

(8) (அ) அமைச்சர் அவர்களால் (1) ஆவது உபபிரிவின் கீழ், சம்பந்தப்பட்ட விதிகள் மூலமாக மாகாண உள்ளூராட்சி நிறுவனமொன்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒருவர் அல்லது அங்கத்தவர் ஒருவர் அல்லது அங்கத்தவர்கள் அனைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் ஐந்து வருடம் வரையிலான கால எல்லைக்குள் அவ் உள்ளூராட்சிமன்றங்களுக்கான அங்கத்தவராக மீள தெரிவு செய்வதற்கு தகுதியுடையவராதல் கூடாது.

(8) (ஆ) அமைச்சர் அவர்களினால் (1) உபபிரிவின் கீழ், இடம்பெறும் விதிகள் மூலம் மாகாண உள்ளூராட்சி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவர் ஒருவர் அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வேறொரு அங்கத்தவர் பதவி நீக்கம் செய்யப்படும் பட்சத்தில் அவருடைய அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும்.

(9) அமைச்சரினால் (1) உப பிரிவின் கீழான விதிகளின் மூலம் மாகாண உள்ளூராட்சி நிறுவனமொன்றில் நிறைவேற்று அதிகாரி, அங்கத்தவர் அல்லது அனைத்து அங்கத்தவர்களையும் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அவ்வாறு நீக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரி, வேறொரு அங்கத்தவர் அல்லது அங்கத்தவருக்கு பதிலாக புதிய நிறைவேற்று அத்திகாரம் கொண்ட அதிகாரியொருவர், ஒரு அங்கத்தவர் அல்லது அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில், சம்பந்தப்பட்ட புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரி அங்கத்தவர் அல்லது அங்கத்தவர்கள் ஏற்கனவே பதவி நீக்கம் செய்யப்படாதவர்களாயின் எஞ்சிய பதவிக் காலத்திலும் கடமையை தொடர முடியும்.

(10) இப்பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஒவ்வொரு விதிகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான கட்டளைகள் உள்ளடக்க வேண்டியதோடு, அதனை வர்த்தமானியில் வெளியிடப்படுமிடத்தையடுத்து நியதிச் சட்டமொன்றின் அதிகாரம் அதற்கு உண்டு.

விளக்கமளித்தல்.

4. இந்நியதிச் சட்டத்தின் சொற்கள், தொடர்பில் வேறொரு வகையில் அர்த்தம் தேவைப்படுமாயின் தவிர "அமைச்சர்" என்பது ஊவா மாகாணத்தின் மாகாண சபை அமைச்சரவையின் மாகாண உள்ளூராட்சி விடய பொறுப்பான அமைச்சர் அவர்களையும், மாகாண சபை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், ஊவா மாகாண ஆளுநர் அவர்களும், "மாகாண உள்ளூராட்சி நிறுவனம்" என்பது ஊவா மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் "மாநகர சபையொன்று" "நகர சபையொன்று" அல்லது" "பிரதேச சபையொன்று" கருதப்படுகின்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரி" என "மாநகர சபையொன்றின் நகர பிதா"அல்லது நகர சபையொன்றின், பிரதேச சபையின் தலைவராக கருதப்படும். "அங்கத்தவர் என்பது" மாநகர சபையொன்றின் உதவிமேயர், மற்றும் அங்கத்தவர்கள், நகர சபையொன்றில், பிரதேச சபையொன்றில் உப தலைவர்களும், அங்கத்தவர்களும் உள்வாங்கப்படுவர். "சம்பந்தப்பட்ட சட்டம்" என மாநகர சபை கட்டளைச் சட்டத்தினால் அல்லது நகர சபை சட்டத்தில் அல்லது பிரதேச சபை சட்டத்திற்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தொடர்பு கொள்ளும்.

ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி அமுலில் இருத்தல் வேண்டும் என்பது.

5. இந்நியதிச் சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழியை அமுல்படுத்த வேண்டும்.

04- 709

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.